# மெட்ரோ ரயில் நிலைய ஷேர் ஆட்டோ, கார் சேவை: பயன்படுத்துவோர் எண்ணிக்கை உயர்வு

சென்னை, ஜன.13: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் இணைப்பு ஷேர் ஆட்டோ, கார் சேவையை டிசம்பர் மாதத்தில் 36,868 பேர் பயன்படுத்தியுள்ளனர்.

மெட்ரோ ரயில் சேவையை பயன்படுத்தும் பயணிகளுக்கான போக்குவரத்து இணைப்பை மேலும் எளிமையாக்கும் வகையில், ஷேர் ஆட்டோ, கார்களை பயன்படுத்த ஷேர் டிரிப் முறை ஆகஸ்ட் 11-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது.

கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை, அசோக்நகர் ஆகிய 8 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ சேவையும், ஏஜி-டிஎம்எஸ், அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி ஆகிய 5 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து கார் சேவையும் வழங்கப்படுகிறது.

மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கி.மீ. சுற்றளவில் உள்ள இடங்களுக்கு ஷேர் ஆட்டோக்கள், கார்கள் இயக்கப்படுகின்றன. இந்நிலையில், ஷேர் ஆட்டோ மற்றும் கார் சேவையை கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் மொத்தம் 36,868 பேர் பயன்படுத்தியுள்ளனர். டிசம்பர் மாதத்தில், கார் சேவையை 5,062 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 31,806 பேரும் பயன்படுத்தினர். கார் மற்றும் ஆட்டோ சேவையை கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் 33,866 பேர் பயன்படுத்தினர்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரி ஒருவர் கூறியது: ஷேர் ஆட்டோ, கார் சேவையை பயன்படுத்துவோர் எண்ணிக்கை மெதுவாக உயர்கிறது. இந்த சேவையை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளி எடுக்கப்படுகின்றன என்றார் அவர்.

ஷேர் ஆட்டோ, கார் சேவையை பயணிகள் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தும் விதமாக, கார் சேவைக்கான கட்டணம் ரூ.15 இல் இருந்து ரூ.10 ஆகவும், ஷேர் ஆட்டோ கட்டணம் ரூ.10 இல் இருந்து ரூ.5 ஆகவும் குறைத்து மெட்ரோ ரயில்வே நிர்வாகம் நவம்பரில் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.